REGD. No. M. 6311 PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 154

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சந்தா விபரம்	
உள்நாடு (இலங்கை உட்பட)	
ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு:	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF THE D.P.F.

சென்னை : கார்த்திகை 25உ வியாழன் (10—12—53) ★ ★ ★ வெளியூர் : கார்த்திகை 26உ வெள்ளி (11—12—53)

"முற்போக்குக் கட்சிகள் ஒன்றுபட வேண்டும்"

— (:) —

'விமர்சனமும் கேலிப்பேச்சும் நின்றாக வேண்டும்'

'நமது போராட்டத்தால் ஆச்சாரியார் வாய் அடைத்துக் கிடக்கிறது'

'சி. ஆர். அதிக நாள் பதவியில் இருக்கமாட்டார்!'

ஈரோட்டில் பொதுச் செயலாளர்

ஈரோடு, டிச. 10—

"நான் போர்வாழ்வில் ஈடுபட்டபோழுது ஆச்சாரியார்தான முதலமைச்சர்; இந்தப் போராட்டக் காலத்திலும் அவரேதான் முதலமைச்சர்; அந்தக் காலத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் எப்படி வெற்றி பெற்றதோ, அதே மாதிரிதான் இந்தப் போராட்டமும் வெற்றியடையும்."

"புதிய கல்வித் திட்டத்தைப் பற்றி ஆரம்ப காலத்தில் பிரமாதமாகப் பேசிவந்த ஆச்சாரியார், இன்று ஏன் வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும்? காரணம், நமது போராட்டந்தான்; ஆகவே, ஒரு பொதுப் பிரச்னைக்கு சகல முற்போக்குக் கட்சிகளும் ஒன்றை ஒன்று விமர்சித்துக் கொண்டிராமலும், கேலி பேசாமலும் ஒன்றுபட்டுப் போராடினால் வெற்றி வெகு விரைவில் கிடைக்கும். ஆகவே, எல்லா முற்போக்குக் கட்சிகளும் பொதுப் பிரச்னையில் ஒன்றுசேர வேண்டும்."

"இன்று நாங்கள் மட்டும் சிறையில் இருக்கவில்லை; பிரஜா-சோஷலிஸ்டு கட்சி தலைவர் அசோக் மேத்தாவும் கம்யூனிஸ்டு கட்சி தோழர் பாலதண்டாயுதமும் சிறைக்குள் இருக்கிறார்கள். எப்படியாவது எதிர்க்கட்சித் தலைவர்களை சிறையிலடைத்து, அந்தக் கட்சியையே அழித்துவிடப் பார்க்கிறது அரசாங்கம்.

"அவர் எங்களுக்கு மட்டுமே தண்டனையை அதிகப்படுத்தச் சொல்லவில்லை; அவருடைய பதவிக் காலத்தையும் அதிகப்படுத்தச் சொல்லுகிறார்; ஆனால், நாங்கள் நினைக்கிறோம்— ஆச்சாரியார், அதிக நாட்களுக்குப் பதவியில் இருக்கமாட்டார் என்று."

என்று, 7—12—53ல், ஈரோட்டில் பெரியார் திடலில், தோழர் எல். ஆர். சுந்தரம் தலைமையில் நடைபெற்ற வரவேற்புப் பொதுக் கூட்டத்தில், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை குறிப்பிட்டார்.

அன்புள்ள தோழர்களே! என்னைப் பாராட்டி மலர்மாலை அணிவித்த தோழர்களுக்கும், இக் கழகத் தோழர்களுக்கும் என் மகிழ்ச்சியை, பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

"எங்களைச் சிறைச்சாலைக்கு அனுப்பிவிட்டதாக நினைத்துக் கொண்டிருக்க ஆச்சாரியார் தான், நம்மிடம் சிக்கிக் கொண்டார். ஆச்சாரியாருக்கு இருக்கும் வெறி உணர்ச்சி அவ்வளவு எளிதாக அவரை விட்டகலாது. எங்கோ ஒரு மலையில், சுகமாகப் பொழுது போக்கிக் கொண்டிருந்தவரை பதவியில் கொண்டுவந்து உட்கார வைத்துவிட்டார்கள்."

"அவருக்குக் கட்சிக்குள் பலத்த எதிர்ப்பு இருக்கிறது. நாங்கள் சிறைபுகு முன் ஆச்சாரியாருக்கு கொஞ்சம் ஆதரவு இருந்தது; ஆனால், நாங்கள் சிறையிலிருந்து வெளியே வந்து பார்த்தால்— ஆச்சாரியார் ஆட்சி பலத்த ஆட்டம் கொண்டிருக்கிறது."

தி. மு. கழகத் துணைச் செயலாளர் மதியழகன் விடுதலை அடைந்தார்

—(0)—

காலை 5-30-க்கு சிறைக் கதவு திறந்தது!

சிறை வாயிலில் வரவேற்கச் சென்ற பொதுச் செயலாளர் உள்பட அனைவருக்கும் ஏமாற்றம்!

சென்னை, டிச. 10—

தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் கே. ஏ. மதியழகனை, இன்று காலை 8 மணிக்கு விடுதலை செய்யப்படுவதாக சிறை அதிகாரிகள் அறிவித்திருந்தனர். ஆனால் முன்னறிவித்த கால அளவில் விடுவிக்காமல், காலை 5-30 மணிக்கே தோழர் மதியழகனுக்கு சிறைக் கதவுகள் திறக்கப்பட்டன.

தோழர் மதியழகன் காலை 8 மணிக்குத்தான் விடுதலை பெறுவார் என்று நகர முழுதும் செய்தி பரவியிருந்தும், காலை மலருமுன்பே, சென்னை மாவட்டச் செயலாளர் கே. எம். கண்ணபிரான், பொருளாளர் கண்ணப்பன், ப. வாணன் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் மலர் மாலைகளுடன் சிறைவாயிலைச் சூழ்ந்துவிட்டனர்.

சரியாக 5-30 மணிக்கு சிறை அதிகாரி வந்து, தோழர் மதியழகனை விடுவித்து முகமலர்ச்சியுடன் வழியனுப்பினார்.

சென்னை மாவட்டச் செயலாளர் கே. எம். கண்ணபிரான் மாலை சூட்டி வரவேற்றார். வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்த வெளியூர் தோழர்கள், சென்னையிலுள்ள வட்டக் கழகத் தோழர்கள், கழக முக்கியஸ்தர்கள் அனைவரும் கழகக் கொடிகளுடனும், மலர் மாலைகளுடனும் சிறைவாயிலுக்கு வந்து, தோழர் மதியழகன், குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே விடுதலை பெற்றதையறிந்து, அங்கிருந்து திரும்பி அவர் தங்கியிருந்த இடத்திற்கு வந்து மலர் மாலை அணிவித்து, தங்கள் பாராட்டுதலைத் தெரிவித்தனர்.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை, பொருளாளர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., 'நம் நாடு' பொறுப்பாளர் அ. பொன்னம்பலனார், இரா. நெடுஞ்செழியன், ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, திருச்சி திராவிட பண்ணை முத்துகிருஷ்ணன், டபிள்யூ. கே. தேவராசன், சி. வி. இராசகோபால், அலமேலு—அப்பாதுரை, என். அப்பாதுரை, மு. சண்முகம், 'திராவிடன்' கிருஷ்ணமூர்த்தி, என். எஸ். பி. லிங்கம், டி. வி. நாராயணசாமி, கே. பி. சுந்தரம், மாயவரம் பழனிச்சாமி, கே. என். அருணாசலம், வி. முனுசாமி, மற்றும் கிளைக் கழகச் செயலாளர்களும், சென்னையிலுள்ள இயக்கத் தோழர்கள் பலரும் தோழர் மதியழகனுக்கு மாலை சூட்டி மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர்.

வரவேற்பு நிகழ்ச்சி முடிந்ததும், பொதுச் செயலாளர் அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன் ஆகியோர், 'அறிவகம்' வந்தார்கள்.

மாநிலங்களைத் திருத்தும் குழுத் தலைவர் பண்டித பந்த்?

டெல்லி செய்தியை பந்த் அறியாராம்!

லட்சுமணபுரி, டிச. 9—

இந்தியத் துணைக் கண்டத்தை இன்று ஆட்டிப் படைப்பது, இந்தி மொழி வெறியர்களான உத்திரப் பிரதேசத்தினர் தான் என்பது அறிந்ததே. மொழிவழியில் அல்லாமல் வேறு துறைகளை குறியாகக் கொண்டு மாநிலங்களைத் திருத்தி அமைக்க உருவாக இருக்கும் உயர் அதிகாரக் குழுவிற்குத் தலைவராக உத்திரப் பிரதேச சர்க்கார், முதலமைச்சர் பண்டித பந்த் அவர்களை நியமித்து இருப்பதாக டெல்லி செய்தி அறிவிக்கிறது.

இது பற்றித் தமக்கு ஒன்றும் தெரியாது என்று, பந்த் கூறுகிறார்.

'சி' மாநில சர்க்கார் என்பது வெறும் நகராட்சி மன்றங்களே!

யூனியன் நிதி அமைச்சர் ஆதிக்கப் பிடங்களாகும்!

"யூனியன் சர்க்காரில் 'சி' பிரிவு சர்க்கார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ள சர்க்கார்கள் அனைத்தும், நகராட்சி மன்றங்களின் அந்தஸ்தில்தான் உள்ளன" என்றும், "அவைகளுடைய பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும், யூனியன் சர்க்கார் நிதி அமைச்சரின் ஆதிக்கத்தில் உள்ளன" என்றும், இமாசலப் பிரதேச சர்க்கார் பிரதமர் டாக்டர் ஒய். எஸ். பார்மர் அறிவித்தார்.

இமாசலப் பிரதேசத்தைப் பொறுத்த வரையில் அதிகமான சலுகைகள் தரப்பட்டிருக்கிறது என்பது உண்மையானாலும், மற்ற 'சி' பிரிவு சர்க்கார்களுக்கும் அத்தகைய சலுகை தரப்பட்டிருக்கிறதா என்பது தெரியாது.

இமாசலப் பிரதேசத்தை ஒரு சுயேச்சை மாநில அந்தஸ்துக்கு உயர்த்தும் நோக்கத்திற்குத் தன்னை யூனியன் சர்க்கார் உளமாக்கிக்கொண்டிருக்கிறது. ஆனால், இந்த

(3-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 10—12—1953 வியாழன்

அறத்தின் நீங்கிய அரக்கர்!

சனம் சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்களைப் பதவியில் அமர்த்தி வைத்து இருப்பதைப்பற்றி, அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பண்டிதர் செய்துள்ள முடிவைப் பற்றி நேற்று சில கூறி இருந்தோம். அதுபற்றியே இன்று மேலும் சில கூறுகிறோம்.

பொதுவாக அகில இந்தியக் காங்கிரசினுடையவும் குறிப்பாகத் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினுடைய பலமும் கட்டுப்பாடும் முக்கியமாக முதன் முதலாகக் கருதப்பட வேண்டும் என்பதில், கட்சித் தலைவர் என்ற முறையிலே பண்டிதருக்கு நியாயமான குறி இருக்குமானால் ஆச்சாரியார் அட்டவாசத்தில், அவர் நியாயமாக செய்திருக்க வேண்டியது என்ன?

பெரும்பாலான காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களுக்கு ஏன் ஆச்சாரியாரைப் பிடிக்கவில்லை. அந்த அளவிற்கு ஆச்சாரியாரின் போக்கிலே இருக்கிற கோளாறு என்ன, அவர் நிர்வாகத்தில் உறுப்பினர்கள் காணும் குறைபாடுகள் என்ன அந்தக் குறைபாடுகள் நியாயமானவைகளா அல்லது அநியாயமானவைகளா, என்பவைகளை எல்லாம் நடுநிலை நின்று அலசி ஆய்ந்துபார்த்து, நேர்மை கண்ட இடத்திற்குச் சாதகமாக நீதி வழங்குவதுதான் முறையாகும்.

தம்மை எதிர்க்கிற காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் அனைவரையும், 'வகுப்புத் துவேஷிகள்' 'பதவிவேட்டையாடுபவர்கள்' 'சுயநலமிகள்' என்றெல்லாம் வெளிப்படையாகப் பத்திரிகையிலே ஆச்சாரியார் அறிக்கை வெளியிட்டாரே, அதிலுள்ள நியாய அநியாயங்களையும், தலைவர் என்ற முறையிலே பண்டிதர் எடை போட்டுப் பார்த்திருக்க வேண்டும். இதுதான் முறை. இதுதான் எந்த ஒரு அரசியல் கட்சிகளுக்கும், கட்டாயம் இருந்தாக வேண்டிய நீண்ட நாளைய, மக்களாட்சிக் கோட்பாடு ஆகும்.

இந்த 'அறநெறி'யைக்கூட, ஒரு பெரிய அரசியல் கட்சி என்று சொல்லிக்கொள்ளும் காங்கிரஸ் கட்சியினிடம், அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் மட்டுமல்லாமல், அரசியலில் நேர்மை இருக்க வேண்டும் என்று விரும்புகிற அனைவரும் எதிர்பார்ப்பர்.

ஆனால், காங்கிரசுக்குள்ளாக மக்களாட்சிப் பண்பைப் பின்பற்றி ஒழுகும் அறத் தன்மையை, நம்மிடம் எதிர்பார்ப்பது, நரியிடம் புலால் மறுத்தலை எதிர்பார்ப்பது போலத்தான் என்று பண்டிதரின் செயல் நமக்கு அறிவிக்கிறது.

மேனகையின் அழகிலும், ஆட்டத்திலும் நாட்டத்தைச் செலுத்திவிட்டு, கூடிக்கலந்து, பின்னர் கிடைத்த சாகுந்தலப் பரிசை, எடுத்துப் பார்க்கவும், ஏற்கவும் மறுத்த இரக்கமற்ற-காட்டுமிராண்டியான விஸ்வாமித்திர காட்டுவாசியின் நேர்மைக்கும், காங்கிரஸ் கட்சி அதிக பலத்தோடு இருக்கவேண்டும் என்று விழைகிற நேரு காங்கிரஸ் சீர்குலைவை விலையாகக் கொடுத்தாவது ஆச்சாரியாரைக் காப்பாற்றும் பூனைப் பதுமை கொண்ட நேர்மைக்கும், நெருங்கிய தொடர்பு நிரம்ப உண்டு.

மேனகையின் கிளிமொழிக்கு, இணக்கேடனை விசுவாமித்திரன் தஞ்சம் அடைந்ததும் சுயநலந்தான்; பெண் மகவு சகுந்தலையைப் பார்க்க மறுத்ததும் சுயநலந்தான்!

அது போலவே, பண்டித நேருவும், காங்கிரஸ் கட்சி என்பதும், சாதகில் பலம் பெறவேண்டும் என்பதும், சொந்தப் புகழுக்கும், சுயநல நிறைவேற்றத்துக்குமே யல்லாது வேறு, நியாயத்தையோ நேர்மையையோ நிலைநாட்ட அல்லவே அல்ல என்பது, நாட்டு மக்களும், பெரும்பாலான காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களும் வெறுக்கும் ஒரு கடைகெட்ட 'வகுப்புத் துவேஷி'யை ஆதரிப்பதிலிருந்தே வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

மேனகையின் மோகத்தை மட்டுமே விரும்பி தனக்குப் பிறந்த குழந்தையை, முன்கோபியான விஸ்வாமித்திரன் உதைத்துத் தள்ளியது போன்றே, காங்கிரஸ் தலைமை பீடத்திலே அமர்ந்துகொண்டு அதனால் ஏற்படும் கீர்த்தியையும் கீர்த்தாட்டையும் அனுபவித்து மகிழ்ந்துகொண்டு, அது பெற்றெடுக்கும் சகுந்தலம் போன்ற அறவழி முடிவை உதறித்தள்ளிவிட்டு, ஆச்சாரியாரை ஆலிங்கனம் செய்து கொள்ள நேரு கிளம்புவது, அவருடைய அறத்தின் நீங்கிய அரக்கர் தன்மையைத்தான் பறைசாற்றுவதாக இருக்கிறது.

கட்டுப்பாடு என்பது ஒரு பழத் தோட்டத்திற்குப் போடப்படும் முள்வேலி போன்றது. அந்த முள்வேலியை ஒரு ஓரத்தில் தாண்டிவிட்டு தோட்டத்தின் காவல்காரன் மட்டும் செல்லலாம் என்பதை எந்தத் தோட்ட உரிமையாளனும் நியாயமானது என்று ஒப்புக்கொள்ளமாட்டான்.

காவல்காரன் முள்வேலியைத் தாண்டினாலும், தாண்டித்து பழத்தோட்டத்துக்குள் சென்றாலும், ஐயத்திற்கும், கண்டனத்திற்கும் காவல்காரன் உள்ளாக்கப்படுவானேயல்லாது, அவன் செயலுக்குப் பாராட்டும் வரவேற்பும் கிடைக்காது என்பது முக்காலும் திண்ணமாகும்.

இதுபோல, காங்கிரஸ் கட்சிக்கு 'கட்டுப்பாடு' என்பது முள்வேலி போன்றது. பண்டிதர் நேரு முதல் ஆச்சாரியார் வரை, அந்தக் கட்சிக்காரர்கள் எல்லாரும் உரிமையாளர்கள் அல்ல. உரிமையாளர் சாதாரண உறுப்பினர்களாக உள்ள அனைவரும் ஆவர். முதல் காவல்காரராக இருக்கிற பண்டிதர், அந்தக் கட்டுப்பாடு வேலியைத் தாண்டினாலும், ஆச்சாரியார் தாண்டினாலும், அவர்கள் மீது வரம்பை மீறிய குற்றத்தைச் சுமத்தவும், கண்டித்துத் தண்டனை தரவும் கட்சியின் சொந்தக்காரர்களான சாதாரண காங்கிரஸ் கட்சியினருக்கு உண்டு. 'ஏதோ பெரியவர் கையைப் பற்றி இழுத்தால் நான் என்ன செய்வது, இணங்கிவிட்டேன்' என்று காங்கிரஸ் கட்சியினர், இருந்து விடுவார்களானால், காங்கிரஸ் தோட்டம், 'பழத் தோட்டம் அல்ல. அது வெறும் புறம்போக்கு நிலம்' என்றுதான் நாட்டு மக்கள் கொள்ளுவர்.

ஒரு கட்சியில் கட்டுப்பாடு என்பது பெருந் தலைவர் விஷயத்திலும் ஒன்றுதான், சாதாரண சுந்தன் விஷயத்திலும் ஒன்றுதான். அதைக் குலைப்பவர்கள் யாராக இருந்தாலும் குற்றவாளிகள்தான். அறத்தின் நீங்கிய அரக்கர்கள் தான்!

பிறகு,

ஆச்சாரியாருக்கு ஏற்பட்டிருக்கும் எதிர்ப்பைக் குறித்து, ஆச்சாரியாரிடமும், காமராஜரிடமும் தனித் தனியாக பண்டிதர் சம்பாஷணை நடத்தி இருக்கிறார் என்று செய்தி வந்தது. இதைக் கொண்டு பார்க்கிறபொழுது, நேரு, ஒரு அளவிற்கு சிக்கலின் நியாய அநியாயத்தை நிச்சயமாக அறிந்திருக்க வேண்டும் என்றே அனைவரும் யூகிப்பர். அறிந்திருந்தும் பண்டிதர் ஆச்சாரியாரின் பதவி நீடிப்புக்கு கட்டளை பிறப்பிக்கிறார் என்றால், அவரும், ஆச்சாரியாரோடு ஒப்பு வைத்து எண்ணத் தக்கவரே என்பதில், ஒருவருக்கும் ஐயம் இருக்க நியாயமே கிடையாது.

இதைக் காங்கிரஸ் கட்சியினர், வெளிப்படையாக ஒப்புக் கொள்ளமாட்டார்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால், அவர்கள் உள்ளம் இந்த உண்மையைத்தான் அவர்களுக்கு அறிவிக்கும் என்பதில் நமக்குத் துளியும் ஐயம் கிடையாது.

எனவே, பண்டிதர் சொந்த முறை கெட்ட தீர்ப்பால் அவரையும், அவர்போல ஆச்சாரியார் விஷயத்தை நோக்குபவர்களையும் அறத்தின் நீங்கிய அரக்கர் என்று கூறி இதை முடிக்கிறோம்.

'தூத்துக்குடி சதி வழக்கு நமது சக்திக்கு சர்க்கார் அறைகூவலாகும்'

'புதிய திட்டம் வாபஸ் வாங்காதவரை நாம் ஓய்ந்திருக்க மாட்டோம்'

ஈரோடு பாராட்டுக் கூட்டத்தில் புதிய கல்வித் திட்டப் போராட்டத் தலைவர் தகவல்

7—12—53 திங்கட்கிழமை யன்று, ஈரோட்டில், பெரியார் தலைமை ஆச்சாரியாரின் அடக்குமுறை ஆட்சியில் சிறைசென்று திரும்பிய பொதுச் செயலாளர் அண்ணா அவர்களுக்கும், கோவை மாவட்டச் செயலாளர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கும் வரவேற்புப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள். அ. பாவு முன்மொழிய, தோழர் ஆர். தேவராசன் வழிமொழிய தோழர் என். ஆ. சுந்தரனம் தலைமை வகித்தார்.

தலைவர்களுக்கு பாகு, மாலைகள், பழமுதிர், கருங்கல் பாளையம், கோட்டை முதலிய தோட்டம் ஆகிய கிளைக் கழகங்களின் சார்பிலும், ஏராளமான இயக்கத் தோழர்கள் சார்பிலும் பல மாலைகளும் அணிவிக்கப்பட்டன; தூத்துக்குடி வழக்கு சம்பந்தமாக மாலைகள் அணிவித்தனர்.

பின்னர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசினார். அவர் பேசியதன் சுருக்கம்:—

"சிறைச்சாலை சென்ற நாங்கள் ஆளாகவில்லை; ஆனால் நாங்கள் சிறைக்குள்ளிருக்கும் போது, வெளியில் இருந்து சேவை செய்த தொண்டர்கள் தான் இளைத்துள்ளார்கள். அவர்கள் செய்த சேவை மகத்தானது. இப்படி இருக்கும் நிலைமையில், ஆச்சாரியார் நமது கட்சியை விழுப்படுத்த பிரசாரத்திற்குக் கிளம்பினார். ஆனால், அவர் கண்ட பலன் என்ன?

"திருமப்பிய பக்கமெல்லாம் கருப்புக் கொடியைக் கண்டதுதான் மிச்சம்; அத்தோடு நில்லாமல், நமது கட்சியின் வலுப்பலைச் சயபாதிக்கும் கொண்டார். உலகம் புகழும் நம் அவர்கள் சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்தார், அவர் கண்டது என்ன! எண்ணற்ற இல்லாத எதிர்ப்பைக் கண்டு வெறுப்படைந்து டில்லிக்குச் சென்றார்.

'ஆச்சாரியார் கொண்டுவந்த புதிய கல்வித் திட்டம், இன்னும் வாபஸ் வாங்கப்படவில்லை; அந்தத் திட்டம் வாபஸ் பெறப்படும்வரை நாம் ஓய்ந்திருக்கப் போவ தில்லை.'

"பலத்தையும், நமக்குக் கிடைத்திருக்கும் ஆதரவை அளவையும் பரிசோதித்துப் பார்க்கவே நம்மீதும், நமது தோழர்கள் மீதும் சதி வழக்கு, மக்களின் மீதும் வழக்குகளை அரசாங்கம் தொடர்ந்திருக்கிறது. இதற்குச் சதி வழக்கிலே பத்து நிலையும் நிதி மதலை நடையும் கொண்ட வேண்டும், அவர்கள் சுமத்திய குற்றங்களுக்கு நம் ஆணையுருக்கு சொல்லு தண்டனை சமாளிக்க வேண்டும். நீங்கள் இந்த வழக்கிற்கு நிதி சேர்த்து அந்த வழக்கை வெற்றி காண்பிக்க வேண்டும்."

"நமது நாட்டு மக்கள் ... ஆச்சாரியாருக்கு ... [illegible] ..."

சென்னை தோழர்கள் விடுதலை

சென்னை, டிச 10 — சேலம் வெங்கடேச நாயக்கர் தெருவில் நடைபெற்ற கூட்டம் சம்பந்தமாக, 9-11-53 அன்று எழும்பூர் 1-வது மாஜிஸ்டிரேட் 42-வது வட்ட தோழர்கள் பூ. அரங்கசாமி, வேணுகோபால், சிகாமணி, திராவிடமுத்து ஆகியோருக்கு ஒரு மாத தண்டனை விதித்தார்.

தோழர்கள் அனைவரும் தண்டனை அனுபவித்து 8—12—53 அன்று விடுதலை அடைந்தனர்.

* * *

செப. 17-ம் தேதி நடைபெற்ற கூட்டம் சம்பந்தமாக நவ. 11-ம் தேதி எழும்பூர் 7-வது மாஜிஸ்டிரேட்டால் தண்டிக்கப்பட்ட தோழர்கள்: இளம்பரிதி, க. பாண்டியன் ஆகியோர் இன்று விடுதலையடைந்த தோழர்களுக்கு சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் கண்ணபிரான் மலர்மாலை சூட்டி வரவேற்றார்.

"மாணவனின் கிழங்கிலிருந்து தயாரிக்கப்பட்ட சோற்றை அரிசி மிகவும் ருசியாக உள்ளது." என்று, அந்த அரிசியால் தயாரிக்கப்பட்ட உணவை அருந்திய மக்கள் சபை உறுப்பினர்கள் கூறினர்.

காஞ்சியில் மதியழகன்

★

சிறை சென்று மீண்ட தோழர் கே.ஏ.மதியழகன் அவர்களுக்கு, 12-12-53 அன்று, காஞ்சியில் வரவேற்பு அளிக்கப்படும். விருந்து கூட்டம், ஒத்தி வைக்கப்பட்டுள்ளது தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

பொங்கற் புது நாள் வருகிறது!

தூத்துக்குடி சதி வழக்கு:

‘உன்னுடைய கடை இங்கிருப்பதால் எங்களுக்காக நீ சாட்சி சொல்ல வேண்டும்’

‘அதிகாரிகளால் சாட்சி சொல்லுமாறு நான் நிர்ப்பந்திக்கப்பட்டேன்’

—[0]—

‘எதிரிகளில் ஒருவரைச் சுட்டிக் காட்டும்படி பார்ப்பனர் சிலர் கேட்டனர்’

திருநெல்வேலி, டிச. 8— [illegible]

15-வது சாட்சி

15-வது சாட்சியாக் முத்து கிருஷ்ண பிள்ளை விசாரிக்கப்பட்டபோது [illegible]

[illegible]

“முதல் கோஷ்டியினர், [illegible]

[illegible]

16-வது சாட்சி

16-வது சாட்சி மாரியப்ப நாடார் கூறியதாவது:—

“புதுக்கிராமம் [illegible]

[illegible]

“எதிரிகளில் ஒருவரைச் சுட்டிக்காட்டும்படி [illegible] சிலர் கேட்டனர்; புதுக்கிராமம் [illegible] எனக்குக் காட்டப்பட்டது.”

திரு. ஆர். [illegible] குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி கூறியதாவது:—

“புதன்கிழமை [illegible] கடைக்கு விடுமுறைநாள்.”

17-வது சாட்சி

17-வது சாட்சி சுப்பய்யா தேவர் விசாரிக்கப்பட்டபோது கூறியதாவது:—

“தூத்துக்குடி புதுக் கிராமத்துக்கு [illegible] 15-ந் தேதி [illegible]

[illegible] 93-ஐ எனக்கு 5, 6 வருஷமாகத் தெரியும்.”

18-வது சாட்சி

18-வது சாட்சி கந்தசாமி கூறியதாவது:—

“[illegible] சுமார் 200 பேர்கள் [illegible] சுமார் 2,000 பேர்கள் இருந்தனர்; [illegible]

[illegible]

[illegible] இத்துடன் இன்றைய விசாரணை முடிந்தது. —[illegible]

[illegible] மாநில சர்க்கார் [illegible]

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

[illegible] இப்பிரச்சினையில் முன்னேற்றம் பெறுக வேண்டியது அவசியமாகும்.

இதிலுள்ள சிக்கல் என்னவென்றால், இந்த சர்க்கார் [illegible] யூனியன் சர்க்காரின் அனுமதியைப் பெறுக வேண்டும் என்பதும், சட்ட சபையில் [illegible] யூனியன் சர்க்காரின் ஒப்புதலைப் பெறுகவேண்டும் என்பதாகும். யூனியன் சர்க்காரின் [illegible]

[illegible]

இ—[illegible]

[illegible], டிச. 8— [illegible]

[illegible]

அணுசக்தி ஆராய்ச்சி: மனித சமுதாய நலவாழ்வுக்கே பயன்பட வேண்டும்

ஐ. நா. பொதுச் சபையில் ஐசனோவர் பேச்சு

நியூயார்க், டிச. 9— “உலக அமைதி [illegible] அணுகுண்டு [illegible] ஐ. நா. [illegible] வேண்டும்,” என்ற [illegible] கருத்தை, அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர், ஐ. நா. பொதுச் சபைக்கு [illegible]

[illegible]

(1) அணுசக்திப் பொருள்களை உலக அமைதிக்குப் பயன்படுத்த [illegible]

(2) அணுசக்தி மூலம், [illegible]

(3) [illegible]

(4) [illegible]

[illegible]

கைத்தறி ஆடைகள் அணியுங்கள்!!

ஆவடியாருக்கு பக்கமேளம்!

ஏழை நேசவாளர் சிபாரிசை ஏற்க மறுப்பு

புதுடில்லி, டிச. 8—ஆண்டு ஒன்றுக்கு 480 கோடி கெஜம் துணி என்ற திட்டக்குழு நிர்ணயித்துள்ள அளவுக்கு மேலாக மில்களும் உற்பத்தி செய்யலாமென்ற அகில இந்திய கைத்தறிக் குழு செய்த சிபாரிசை சர்க்கார் ஏற்று நடத்தவில்லை என தொழில் துறை அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி இன்று தெரிவித்தார்.

இன்று மக்கள் சபையில், ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் 'திட்டக்குழு நிர்ணயித்த அளவுதானே தவிர முற்றிலும் உயர்த்தல்ல' என்றார்.

ஒட்டிக்கொண்டு பிறந்த இரட்டைக் குழந்தைகள்

ரண சிகிச்சையில் ஒன்று மாண்டது

லண்டன், டிச. 9—சாலிஸ்பரியில் ஒட்டிக்கொண்டு பிறந்த இரட்டைப் பெண் குழந்தைகள் லண்டன் ஆஸ்பத்திரியில் ஆபரேஷன் செய்யப்பட்டு பிரிக்கப்பட்டன. இந்த இரண்டு குழந்தைகள் வயிற்றுப் பாகத்தில் ஒட்டிக்கொண்டு பிறந்திருந்தன.

95 நிமிட நேரம் ஆபரேஷன் நடைபெற்றபோது பிரித்தெடுக்கப்பட்டது; 21 வைத்திய நிபுணர்கள் ஆபரேஷனை நடைபெறுவதைக் கவனித்தனர்.

ஒரு குழந்தை சிலமணி நேரம் கழித்து மாண்டது; மற்றொரு குழந்தை சௌக்கியமாக இருக்கிறது. பிழைத்துவிடும் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது.

இரு குழந்தைகளுக்கும் வயிறு ஒன்றாக தவிர மற்ற பாகங்களெல்லாம் தனித்தனியே இருந்தன. வயிறு இரு குழந்தைகளுக்கும் தனித்தனி இருந்திருந்தால் ஒரு குழந்தை இறந்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது என்று கருதப்படுகிறது. —கேபள்

ஆத்தூர் வட்டத்தில் லட்சம் ஏகர் தரிசு நிலம்

சென்னை, டிச. 9—சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆத்தூர் வட்டத்தில், சுமார் ஒரு லட்சம் ஏகரா நிலம் தரிசாக கிடக்கிறதென்றும் இதை சாகுபடிக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை செய்ய சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறதென்றும் மந்திரி பக்தவத்சலம் சேலத்தில் கூறினார்.

இதுபற்றி மாவட்ட அதிகாரிகளிடம் விவாதம் நடத்தியதாகவும், நல்ல திட்டம் ஒன்றைத் தயாரிக்கும்படி கூறியிருப்பதாகவும் அவர் சொன்னார்.

கல்வி நிலையங்களின் சுதந்திரம்

கோயம்புத்தூர், டிச. 6—கல்வி நிலையங்கள் தனிப்பட்ட முறையில் சுதந்திரமாக இயங்க வேண்டுமென்று கோவை கஸ்தூரி நற்றுணை விழாவில் தங்கமை வகித்த சுவாமி பிரகாசா கூறினார்.

'ஆசிரியர்கள் அடிக்கடி மாற்றப்படுவது கூடாது. அரசாங்கப் பள்ளியில் இந்நிலைமை அதிகரித்துள்ளது. கல்வி கற்கும் போது மாணவர்கள் மனதில் ஆசிரியர்களின் நினைவு பதிய, ஆசிரியர்களை அடிக்கடி மாற்றக்கூடாது,' என்றார்.

"பள்ளிகளுக்கு அரசாங்கம் பண உதவி செய்தாலும், கல்விக் கூடங்களை சுதந்திரமாக இயங்கச் செய்யவேண்டும்" என்றும் அவர் மேலும் சொன்னார்.

கழகக் கூட்டங்கள்

★

ஆரணி

12—12—53 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு

பேச்சாளர்கள்:
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ
இரா. நெடுஞ்செழியன்
என். வி. நடராசன்

★

விருத்தாசலம்:

13—12—53 ஞாயிறு மாலை
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
என். வி. நடராசன்
பேசுவர்

திருச்சி தி. மு. கழக உறுப்பினர் கூட்டம்

"திருச்சி பெரிய கடை வீதி, தி. மு. கழக அங்கத்தினர்கள் கூட்டம், கழகக் கட்டடத்தில் 13—12—53 ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெறும். அனைவரும் தவறாமல் அழைப்பாகக் கொண்டு தவறாது வருகை தருமாறு வேண்டுகிறேன்.

ஆராயப்படும் பொருள்: திராவிடர் திருநாள் — பொங்கல் பெருநாள் விழா நடத்தல், ஆண்டு விழா கொண்டாடுதல்." என்று பொருளாளர் அறிவிக்கிறார்.

17-வது வட்டம் தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம்

"13—12—53 காலை 9 மணியளவில் கழக அலுவலகத்தில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அதுசமயம் பொது உறுப்பினர்கள் யாவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்று செயலாளர் மு. மாசிலாமணி அறிவிக்கிறார்.

வேலூர் தி. மா. மு. கழக தோழர்கட்கு

வேலூர் மாணவ முன்னேற்றக் கழகத்தின் காரியக் கமிட்டியினர் யாவரும், பழைய கழனி கட்டு தெருவிலுள்ள கழகக் காரியாலயத்தில், 13 12 53 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வருமாறு கழகத்தின் செயலாளர் ஆ. மணி செட்டியார் துரை அவர்கள் அறிவிக்கிறார்.

பள்ளிக்கூட கட்டிட நிதிக் குழு உறுப்பினர்கள் கூட்டம்

பம்பாய், தாராவி தமிழ்ப் பள்ளிக்கூட கட்டிட நிதிக் குழுவின் உறுப்பினர்கள் கூட்டம் தோழர் எம். வி. துரைசாமி தலைமையில் 13-12-53 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு மாமா மெல்லா வாடியில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதாக தோழர் என். தியாகராசன் கூறுகிறார்.

விரும்பவில்லை!

"மக்களாட்சியில் நடுநிலைமையில் நின்று அவருடைய சீர்திருத்தங்களை எதிர்த்தவர்களிடத்தில் அவர் காட்டிய கொள்கையை பலர் விரும்பவில்லை. மக்களின் கருத்துக்கு ஒவ்வாத, புதுக் கல்வித் திட்டம் போன்றவைகளில் பிடிவாதம் காட்டாது, மக்களாட்சி மிளிர, தளராது உழைப்பது அவரது கடமை. பிற கட்சிக்காரர்களின் கொள்கைகளுக்குப் பணிவகா என்ற மனப்பான்மை விடுத்து, "எல்லார்க்கும் நன்றும் பணிதல், அவருள்ளும் (அதிகார) செல்வத்தை உடையவருக்கு அது மிகவும் சிறந்தது" என்ற வள்ளுவர் வாக்கிற்கு இலக்காயிருப்பாரென நம்புகிறோம்."

—'தரா.' 9—12—53

வாணியம்பாடி வட்டாரத்தில் தோழர் கருணாநிதி

2—12—53ல், வாணியம்பாடி புகைவண்டி நிலையத்தில், சுமார் 5000-க்கு மேற்பட்டவர்கள் குழுமியிருந்து, தோழர்கள் மு. கருணாநிதி, கண்ணதாசன், முல்லை—சத்தி, அன்பில் தர்மலிங்கம், திராவிடப்பண்ணை முதலிருவரை, ஆகியவர்களுக்கு பலமாலைகள் அணிவித்து, மேளவாத்தியங்கள் முழங்க வரவேற்றனர். பின்னர் தோழர் எம். பி. முல்லைவடிவேல் அவர்களின் இல்லத்திற்கு, தோழர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். டாக்டர் அப்துல்லா அவர்களின் தலைமையில், தோழர்களை அவர்களால் தேனீர் விருந்தளிக்கப்பட்டு, புகைப்படமும் எடுக்கப்பட்டது. பின்னர் பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்திற்கு முக்கிய வீதிகளின் வழியாக தோழர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருக்க பொதுக்கூட்டத்தில் தோழர் கே. சுப்ரமணியம் தலைமையில் மு. கருணாநிதி அவர்களுக்கும், முல்லை-சத்தி அவர்களுக்கும் வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

தோழர்கள் கண்ணதாசன், அன்பில் தர்மலிங்கம், முல்லை-சத்தி, மு. கருணாநிதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பொதுக்கூட்டத்தில், மாலையை ஏலம் போட்டதில் ரூ 10க்கு சென்னை கருணாகரன் எடுத்துக் கொண்டார். உண்டியல் மூலம் ரூ 25 வசூலாயிற்று.

3—12—53 காலை 10 மணிக்கு சோலையார் பேட்டையில் வரவேற்பளிக்கப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு, நூர்ஜஹான் தியேட்டரில், தோழர் லெனின் தலைமையில், தோழர்கள் கண்ணதாசன், முல்லை-சத்தி, மு. கருணாநிதி ஆகியோர் கல்லக்குடி அறப்போராட்டத்தின் காரணங்களையும், தற்கால அரசியல் நிலையையும் விளக்கமாகப் பேசினர்.

திருப்பத்தூரில் 3—12—53-ந் தேதி பகல் 2-மணிக்கு வரவேற்புக்கும், பொதுக் கூட்டத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மீனாட்சி தியேட்டரில் ஏராளமான மக்கள் தோழர் கருணாநிதியை வரவேற்றனர்.

தோழர் எம். நடேசன் தலைமையில் வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது.

தோழர்கள் அன்பில் தர்மலிங்கம், கண்ணதாசன், முல்லை-சத்தி, கருணாநிதி ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில், கல்லக்குடி அறப்போர் நிதிக்காக ரூ 70 உண்டியல் மூலம் வசூலாயிற்று. பின் தோழர் வி. பி. ராஜாபாதர் இல்லத்தில் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

மாலை 6 மணிக்கு உயர்நிலைப் பள்ளி மைதானத்தில், நகரான் மைக் கழகத் தலைவர் வி. எஸ். வீரபத்திரனார் தலைமையில் நகர சபையின் சார்பாக வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

7 மணிக்கு, இ. எஸ். இராகவ முதலியார், எம். எல். ஏ., அவர்களின் இல்லத்தில் தி மு கழகத் தோழர்களால் வரவேற்பளிக்கப்பட்டது.

முல்லை—நிம்மியம்பட்டு

இரவு 8 மணிக்கு நிம்மியம்பட்டு பஸ் நிலையத்தில், அலங்கரிக்கப்பட்ட பந்தலில், வாத்திய ஒலிகளுடன் வரவேற்பளிக்கப்பட்டது. தோழர் கனகராஜன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள்: கண்ணதாசன், முல்லை—சத்தி, கருணாநிதி ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினர். வெள்ளைகுட்டை தி மு கழகத் தோழர்களாலும், மற்றும் பல இயக்கத் தோழர்களாலும் மலர் மாலைகளும் வரவேற்பு இதழ்களும் வாசித்தளிக்கப்பட்டன.

முல்லை—கொம்மை பொதுக்கூட்டம்

இரவு 9 மணிக்கு பஸ் நிலையத்தில் இருந்து முல்லைக்கு வாத்திய ஒலிகளுடன் அழைத்துச் செல்லப்பட்டனர். பொதுக்கூட்டம், பொன்னூர் கே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள்: கண்ணதாசன், அன்பில்—தர்மலிங்கம், முல்லை-சத்தி—கருணாநிதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கூட்டத்திற்குப் பின், முல்லை—சத்தி அவர்களின் வீட்டில், வெளியூர், சுற்றுப்புறங்களிலிருந்து வந்திருந்த சுமார் 300-க்கு மேற்பட்ட தோழர்களுக்கு உணவளிக்கப்பட்டது.

★

4—12—53 முதல் மு கருணாநிதி அவர்களுக்கு தலைவலி, ஜுரம், உடல்வலி ஏற்பட்டு, இரண்டு தினங்கள் ஓய்வு பெற்றார். அதன் காரணமாக கோயம்புத்தூர் நிகழ்ச்சியை தந்தி கொடுத்து ரத்து செய்துவிட்டார்.

5—12—53 சனி இரவு தஞ்சைக்குப் பயணமானார்.

மாற்றுக்கருத்தினர் கண்களில் சி. ஆர்

அவருடைய வகுப்புவெறி சுட்டப்படுகிறது

சென்னை, டிச. 8—சென்னை சட்டசபையிலுள்ள பதினாறு எதிர்க்கட்சிகள் கொண்டிருக்கும் திராவிட சட்டசபைகட்சி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:

"இந்தியாவின் முதலமைச்சரும், காங்கிரஸ் தலைவருமான நேரு பண்டிதர், அண்மையில் சென்னை ஆச்சாரியாரின் ஆட்சியைப் பாராட்டி பேசினாரென்று, ஆச்சாரியாரின் ஆட்சியை பாராட்ட முடியாது சகித்தும் இம்மாநில மக்கள் எதிர்பார்த்தார்கள். அதுபோல நேருவை கடக்காததால், மக்கள் ஏமாற்றமடைந்திருக்கிறார்கள். தப்போது அவர்களை முழுதறிந்துதப்போதுள்ள மந்திரி சபையின் நடத்தையைப் பற்றி விசாரணை நடத்த வேண்டியிருக்கிறது.

சட்டசபை காங்கிரஸ் கட்சியின் தலைவராக ஆச்சாரியாரை நியமித்த பின்னர், அவரையே முதலமைச்சராக நியமித்தது ஜனநாயகத்திற்கு முரணானது. ஆச்சாரியார் எந்த தொகுதியிலிருந்தும் சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. நியமன உறுப்பினர் யாரும் ஜனநாயக சர்க்காரில் ஒன்றில் ஆட்சிபுரியும் கட்சியின் தலைவராகவும், முதலமைச்சராகவும் இருக்க முடியாது.

பெரும்பான்மைக் கட்சி ஒரு சர்க்காரை அமைத்து, மாநிலத்தை நேர்மையாக ஆட்சி புரியுமாறு காங்கிரஸ் கட்சியினர் மனம் கோரவிருந்த நேரத்தில் ஆச்சாரியாரை கொண்டு வந்தனர்; ஆனால், ஆச்சாரியாரும், அவரது சகாக்களும் இந்த இரண்டு ஆண்டுகளாக இந்த மாநிலத்தைக் 'தாறுமாறாக ஆட்சிபுரிந்து' வருவதைக் கண்டு காங்கிரஸ் வாதிகளும் வெறுப்படைந்து கொண்டிருக்கிறார்கள். ஆச்சாரியாரும், அவரது அமைச்சர்களும் ஆட்சி நடத்தும் முறை, பல வகுப்பாரிடையே வகுப்புவாத உணர்ச்சியை உண்டாக்கியும், சகிப்புத்தன்மையைப் பாதித்தும், அவநம்பிக்கையையும் விளைவித்து வருகிறது.

ஆச்சாரியார் ஆட்சியின் சாதனை அவரது ஜாதியாருக்கு சலுகை காட்டுவதாகவே இருக்கிறது. உயர் பதவிகள், அதிகாரங்கள் எல்லாம் பார்ப்பனர்களுக்கே அளிக்கப்படுகின்றன. பல சந்தர்ப்பங்களில பார்ப்பனரல்லாதார் சமூகத்தின் மேதைகள் அலட்சியம் செய்யப்படுகின்றனர். அவர்களுக்குள்ள பதவிகள் பாதிக்கப்படுகின்றன.

ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தை மக்கள் எதிர்க்கிறார்கள். இன்றைய சமுதாயத்தின் கீழ்த்தரப்படிகளிலுள்ள மக்களின் அடிமைத் தனத்தை சாசுவதமாக்கும் முயற்சியாகவே புதிய கல்வித் திட்டம் கருதப்படுகிறது.

ஆச்சாரியார் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே சர்வாதிகாரியாகக் கருதப்படுகிறார்.

அதிக விளம்பரம் செய்யப்பட்டிருக்கும் நிக்கல் காங்கிரஸ் ஆட்சியில் நிலவரம், வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும், வகுப்புத் தகராறும், பஞ்சம் அவதிப்பிரச்சினையும் அதிகரித்துள்ளன. லஞ்சம் ஊழல்களும் மலிந்துள்ளன.

இந்த விஷயம் பற்றி குடியரசின் மேலிடத்திலிருந்து — பிரதமருக்கு நாகரிகம் செய்யவேண்டும். ஆச்சாரியார் சர்க்காரின் நிர்வாகம் பற்றி விசாரணை நடத்த வேண்டும்.

இந்த மாநிலத்தின் நேர்மையுள்ளம் படைத்த மக்கள் அனைவரும் இதுபோன்ற வகுப்புவாத ஆட்சிக்கு மறுப்பு தெரிவித்து, இந்திய பிரதமர் அனுதினமும் தேடி, மாநிலத்தைக் காப்பாற்ற முயற்சிப்பதில் எங்களுக்கு ஆதரவு தரவேண்டும்."

இந்த அறிக்கையில் கையொப்பமிட்டிருந்த எம்.எல்.ஏக்கள்:—

பி. ரங்கசாமி, பி. ரத்னசாமி, எம். அனுமந்தராயர், பி. ஆர். ராஜகோபாலன், ஏ. வேலு, டி. சண்முகம், எம். பழனியாண்டி, கே. எஸ். சம்பந்தம், டி. கிருஷ்ணமூர்த்தி, கே. டி. பழனிசாமி, ஏ. துரைசாமி, ஈ. எல். ராகவன், ஏ. சேதுராமன், ஞானப்பிரகாசம், எம். ஆர். கந்தசாமி மணியம் ஆகியோர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (26, குப்பு நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் இ. எஸ். கண்ணப்பனார், எம். ஏ.